பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L
கணக்கியல்
திரு. மரியதாஸ்
89 - கம்பனி
இறுதிக்கணக்குகள்
90 - வங்கிக் கணக்கு
இணக்கக்கூற்று
நடைபெறுகின்றது.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

# உதயன்

விலை
ரூ2/50

A/L
பொருளியல்
திரு. லோகசிங்கம்
89 - இலங்கையின்
பொருளாதாரம்
90 - தேசிய வருமானம்
நடைபெறுகின்றது.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆனி மீ 09 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 18 (23 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 169

# ராஜீவின் விசேட பிரதிநிதியாக ஜெய்ப்பூர் மகாராஜா விஜயம்!

## கொழும்பில் நிலைமையை ஆராய்ந்தார்

புதுடில்லி, ஜூன் 23

இலங்கையின் அரசியல் நிலைமை பற்றி ஆராய்வதற்காக பிரதமர் ராஜீவ் காந்தி தமது விசேட பிரதிநிதி ஒருவரைக் கொழும்புக்கு அனுப்பினார்.

பிரதமரின் விசேட பிரதிநிதியாக ஜெய்ப்பூரின் முன்னாள் மகாராஜா திரு. பவானி சிங் கொழும்புக்கு வந்து இரு வாரங்கள் தங்கியிருந்தார். கடந்த புதன்கிழமை அவர் இந்தியா திரும்பினார்.

பிரதமர் ராஜிவ் காந்தியின் சார்பில் இலங்கையில் தங்கி அங்குள்ள அரசியல் நிலவரம் பற்றி திரு. பவானிசிங் ஆராய்ந்தார் என்றும் —

இலங்கை நிலவரம் பற்றி விரிவான அறிக்கை ஒன்றை பிரதமர் ராஜீவ் காந்தியிடம் அவர் சமர்ப்பித்தார் என்றும் ஜெய்ப்பூர் அரண்மனையில் இருந்து வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பெண் வயிற்றிலிருந்து 7 பவுண் தாலிக்கொடி!

வேலணை, ஜூன் 23

இப்போதெல்லாம் ஆயுதங்களை வைத்திருப்பவர்களைத் தேடி வேட்டை நடக்கிறது. முக்கியமான இடங்களுக்குள் செல்வோர் வசம் ஆயுதங்கள் இருக்கிறதா என்று உடம்புச் சோதனை நடத்தப்படுகிறது.

ஆனால் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கோவிலில் பிடிக்கப்பட்ட பெண் ஒருவரின் வயிற்றில் நகை இருக்கிறதா என்று வைத்திய சோதனை நடந்த சம்பவம் ருசிகரமானது!

ஆலயப் பூங்காவனத் திருவிழாவன்று 58 வயதான பரமநாதி கமலாம்பிகை நித்திரையில் அசந்தையாக இருந்தவேளை அவரது ஏழு பவுண் எடை உள்ள தாலிக்கொடி காணமற் போய்விட்டது.

அருகில் எல்லா இடங்களிலும் தேடினார்கள். கிடைக்க

[6ஆம் பக்கம் பார்க்க]

## வ. பி. போ. ச. சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடபிராந்திய போக்குவரத்துச்சபை குடாநாட்டில்தனது சேவைகளை நேற்று முதல் மட்டுப்படுத்தியுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றுக்குறையை அடுத்தே இந்த ஏற்பாடு.

சபையிடம் தேவையான அளவில் எரிபொருள் தற்பொழுது கையிருப்பில் உள்ளதாகவும் —

எனினும் தொடர்ந்து ஏற்படக்கூடிய நெருக்கடிகளை உத்தேசித்தே இந்த மட்டுப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் சொன்னார்.

பல குறுகிய தூர சேவைகளை சபை நேற்றுமுதல்இடை நிறுத்தியுள்ளது. (உ-9)

## போக்குவரத்து ஊழியர் வேலைக்கு வர காலக்கெடு

கொழும்பு, ஜூன் 23

போக்குவரத்துச் சபைகளைச் சேர்ந்த சகல ஊழியர்களும் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு — 26ஆம் திகதிக்கு — முன்னதாக வேலைக்குத் திரும்பவேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வேலைக்குத் திரும்பத் தவறுவோர் தங்கள் பதவிகளை இழந்து விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-க-10)

## வவுனியாவில் புதனன்று மோதல் சம்பவங்கள்!

வவுனியா, ஜூன். 23

புதனன்று வவுனியாவை அண்டிய பகுதிகளில் பரவலாக மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன.

புதனன்று காலை வவுனியா மருக்காரம்பலை, கோழியர் குளம் ஆகிய இடங்களில் இடம் பெற்ற இரு வேறு மோதல் சம்பவங்களில் இரண்டு படைவீரர்கள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மேஜர் ஒருவரும் இரு ஜவான்களும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கோழியர்க்குளத்தில் வேறு ஒன்பது பேரும் மருக்காரம்பலை பகுதியில் ஆறு பேருமாக மொத்தம் 15 பேர் உயிரிழந்ததாகவும்—

பல ஆயுதங்கள் படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் மற்றொரு செய்தி தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படையினர் நேற்று இரத்ததானம் செய்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு நேற்று இந்திய அமைதிப் படையினர் இரத்த தானம் செய்தனர்.

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்தம் தேவைப்படுவதாக பத்திரிகையில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து அமைதிப்படையினர் இரத்த தானம் செய்தனர்.

கோட்டை இராணுவ கமாண்டர் பிரிகேடியர் என். எஸ். ஜில், அரியாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சாஸ்திரி, கோண்டாவில் கமாண்டர் மேஜர் சசிக்குமார், மேஜர் பட்பட்டையா கோட்டை பிரதி பிரிகேடியர் கமாண்டர் கேர்ணல் பாரத் யாதவ் ஆகியோர் உட்பட சுமார் 30க்கும் மேற்பட்ட அமைதிப்படையினர் நேற்று இரத்தத் தானம் செய்தனர்.

அமைதிப்படை விலகல் விவகாரம்:

## புதிதாகப் பேச்சு நடத்தும் யோசனை எதுவும் இல்லை!

கொழும்பு, ஜூன் 23

அமைதிப்படை விலகுவது குறித்து புதிகாகப் பேச்சுக்கள் நடத்தப்படுவது பற்றிய யோசனை எதுவும் இந்தியாவுக்கு இல்லை என்று தெரிகிறது.

பிரதமர் ராஜீவ்காந்தி, ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு புதன்கிழமை எழுதிய பதில் கடிதத்தில் புதிதாகப் பேச்சு நடத்துவது சம்பந்தமான யோசனை எதனையும் தெரிவிக்கவில்லை.

கட்டம் கட்டமாக அமைதிப்படையினர் விலக்கிக் கொள்ளப்படுவது ''ஆலோசனை ஒத்துழைப்பு'' என்ற உணர்வுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும்-

அமைதி உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு வழங்கப்படுவது சம்பந்தமான உறுதி மொழியின் அடிப்படையில் இது இடம் பெற்று வருவதாகவும் - பிரதமர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருப்பதை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு இந்தியா உத்தரவாதியாக இருக்

(6ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
23—06—1989
ஆனி — 09
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
05.54 முதல் 07.24 வரை
ராகுகாலம்:
10.24 முதல் 11.54 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



அரியாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சாஸ்திரி நேற்று இரத்த தானம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

## இந்தியப் பிரமுகர்கள் வீடு திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஜே. வி. பியின் அச்சுறுத்தல்களை அடுத்து கொழும்பு ஹோட்டல்களில் தங்கியிருந்த, இந்தியப் பிரமுகர்கள் நேற்று முதல் தமது இல்லங்களுக்கு திரும்பத் தொடங்கி உள்ளனர்.

இத்தகவலை இந்தியத் தூதரகத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே. வி. பியின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கை முஸ்தீப்புக்களை அடுத்து இந்தியர்களை ஹோட்டல்களில் தங்கி இருக்குமாறு இந்தியத் தூதரகம் அறிவித்திருந்தது தெரிந்ததே. (உ-10)

## 'எயிட்ஸ்' நோயாளர் எண்ணிக்கை: 17

யாழ்ப்பாணம், ஜூன் 23

நாட்டில் ''எயிட்ஸ்'' நோய் பீடித்திருப்பவர்களின் எண்ணிக்கை இப்போது பதினேழாக உயர்ந்திருக்கிறது.

கொழும்பு மத்திய மேக நோய் தடுப்புப் பிரிவின் ஆகப் பிந்திய மாதாந்த அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதினேழு பேரில் வெளிநாட்டவர்களும் அடங்குவர் என்றும், அவர்கள் நோயால் பீடிக்கப்பட்டதாகத் தெரிந்ததும் சொந்த நாடுகளுக்குத் திரும்பிவிட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குளம் பகுதியில் 15 வீடுகள் தீக்கிரை!

வவுனியா, ஜூன் 23

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியங்கள் அமைந்துள்ள பகுதியில் இருந்த சுமார் 15 வீடுகள் ஆயுதந்தாங்கிய குழுவினரால் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

இப்பகுதியில் வசித்தவர்களின் உடைமைகள், பெறுமதிமிக்க பொருட்கள் என்பனவும் வீடுகளுடன் சேர்ந்து எரிந்து நாசமாகியுள்ளன.

இக்குடும்பங்கள் மீண்டும் அகதிகளாகி நெற் சந்தைப் படுத்தும் சபையின் களஞ்சியங்களில் தஞ்சமடைந்தார்கள்.

இந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (உ-164)

## இளைஞர் ஒருவரின் சடலம்!

வவுனியா, ஜூன் 23

கடந்த செவ்வாயன்று மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

சடலம் மாலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்தவர் புளிதறித்த புளியங்குளத்தைச் சேர்ந்த மோகன் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-164)

## யாழ் நகைக் கடைக்காரர் மண்கும்பானில் கொலை!

யாழ்ப்பாணம் நகைக்கடை ஒன்றின் உரிமையாளர் கடந்த புதனன்று இரவு மண்கும்பான் பகுதியில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

மண்கும்பானைச் சேர்ந்தவரும், மண்கும்பான் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபை உறுப்பினரும், பிரபல வர்த்தகருமான வைத்திலிங்கம் கனகலிங்கம் என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த போதே வழியில் இவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இவரது உறவினர்கள் இவரைக் காணவில்லை எனத் தேடியபோது, இவரது சடலம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் மணலினுள் புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிள் அருகில் உள்ள பற்றை மறைவில் கிடக்கக் காணப்பட்டது. (உ-164)

### முச்சந்தி முரளி



அப்ப மலைவிழுங்கி மகாராணிகளும் நம்ம நாட்டிலை இருக்கினம் எண்டு சொல்லுங்கோ......!

## கிளிநொச்சியில் மோதல் ஒருவர் பலி! இருவர் காயம்!!

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் நடைபெற்ற நேரடி மோதல் ஒன்றில் இளைஞர் ஒருவர் மரணமடைந்தார். மற்றொருவர் காயமுற்றார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சுப்பையா முருகையா (வயது 19) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

## வேலைநிறுத்த நிலைமை மேலும் மோசமடைகிறது

கொழும்பில் வேலைநிறுத்த நிலைமை மேலும் மோசம் அடைந்திருக்கிறது.

போக்குதரத்து ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக சிலோன் டுபாக்கோ கம்பனி, சிங்கர் கம்பனி ஆகியவற்றின் ஊழியர்களும் நேற்று வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

கொழும்பில் தொடர்ந்து 11ஆவது நாளாக நேற்றுப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன. (உ)

## யாழ். செயலக செயற்பாடு; இணைப்பாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் செயகத்தில், அலுவல்கள் ஐந்து நாட்களும் முழுமையாக நடக்கும் அளவுக்கு நிலைமை முன்னேற்றம் கண்டுள்ளது என்றும் —

தொடர்ந்தும் எந்த அச்சுறுத்தல்களின் மத்தியிலும் இனி அது ஐந்து நாட்களும் இயங்கும் என்றும் —

யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. அ. முருகநேசன் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

பிரஸ்தாப அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

செயலகம், அச்சுறுத்தல் காரணமாக வாரத்தில் முழு நாட்களும் செயற்படாமல் ஸ்தம்பித்தமையால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது நிவாரணப் பணத்தினைப் பெற முடியாமலும், அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகினர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாண அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகள் காரணமாக, மீண்டும் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் வழமைபோன்று ஐந்து நாட்களும் செயலகம் செயற்படத் தொடங்கியுள்ளது. ஊழியர்களின் வரவு நாளுக்கு நாள் அதிகரித்து, முழுமையாகச்

(6ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும் Second Hand Book Depot 13/6 ஸ்ரான்லி ரோட், (இலங்கை வங்கி முரசொலிக்கு முன்பாக பட்டப்படிப்பு கல்லூரி லேன் யாழ்ப்பாணம். (799)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத்தளபாடங்களும் புத்தக அலுமாரிகள் Fan, Sisil Fridge Bicycle, Singer தையல் மெசின் விலை உயர்ந்த குத்துவிளக்குகள் T.V. மற்றும் பல மின்சார உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. Supeka 343, பருத்தித்துறை ரோட், அரசடி நல்லூர். (11311)

### தேவை

டீசல் மெக்கானிக் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை தங்கும் இடம், உணவு வசதி கொடுக்கப்படும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும். க. செல்வராசா விஜிதா டீசல்சராஜ், ஸ்ரீவள்ளிசபே முன் ஒழுங்கை, சாவகச்சேரி. (792)

டாக்டர் குடும்பத்திற்கு சமையல் செய்வதற்கு உதவியாளர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். க. பொன்னம்பலம் மெடிக்கல் கிளினிக் ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (1001)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்; Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2833]

### காணவில்லை

16- 6- 89 வெள்ளிக்கிழமை மாலை நல்லூர், வீரமாகாளி அம்மன்கோவில்களுக்கு இடையில் சங்கிலிப்பென்ரன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 17/1 பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சன்மானம் வழங்கப்படும். (1004)

### கல்வி

G.C.E. O/L A/L சித்தியடைந்தவர்கள் குறைந்த செலவில் மேற்படிப்பு படிக்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். திருமதி P. டானியேல் மில்லர் ஹாவுஸ்' மல்லாகம் சந்தி, மல்லாகம். (800)

## குரும்பசிட்டியில் இலக்கியக் கருத்தரங்கு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் மாதாந்த இலக்கியக் கருத்தரங்கு 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறும்.

வட மாநில கல்வியதிகாரி (சித்திரம்) கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் மே மாதம் பத்திரிகையில் வெளியான சிறுகதைகள் விமர்சிக்கப்படவுள்ளன.

'திசை' பிரசுரித்த சிறுகதைகளை கனகரத்தினம் மகா வித்தியாலய உதவி அதிபர் க. வை. தனேஸ்வரனும்-

'சஞ்சீவி' யில் வெளியான சிறுகதைகளை திரு. கே. வி. இராசரெத்தி (மும் நடமாடி)

'தினகரன்' சிறுகதைகளை இலங்கை வங்கி பத்தியாகத்தர் ச. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரனும்-

'வீரகேசரி' சிறுகதைகளை நாவண்ணனும் விமர்சிப்பார்கள்.

கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தொகுப்புரை வழங்குவார். (இ-27)

# மூன்று மொழிகளிலும் வங்கிப் படிவங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23 சகல வங்கிகளின் விண்ணப்பப்படிவங்களும் மூன்று மொழிகளிலும் அச்சிட உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்பொழுது பாவனையில் உள்ள சில விண்ணப்பப்படிவங்கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே அச்சிடப்பட்டுள்ளன.

தமிழ்மொழி அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து சகல வங்கிகளுக்கும் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வங்கிகளின் பாவனைக்கு வரும் என நம்பப்படுகிறது. (இ-10)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 23 எழுத்துச் சீர்திருத்தம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நாளை 24 ஆம் திகதி மாலை மூன்று மணிக்கு திருமுறைக்கலாமன்றம் ஆய்வு அரங்கில் நடைபெறும்.

பேராசிரியர் அருட்திரு. நீ. ம. சவரி தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் கலாநிதி எம். ஏ. நுஃமான், கலாநிதி ஈ. பாலசுந்தரம், திருமதி ராணி சின்னத்தம்பி, புலவர் ஈழத்து சிவானந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள் (இ-3)

## சைவ சித்தாந்த ஆய்வு வட்ட ஆரம்ப விழா

யாழ்ப்பாணம் ஜூன் 23 சைவசித்தாந்த ஆய்வு ஆரம்ப விழா எதிர் வரும் 25 ஆம் திகதி மாலை 3 மணிக்கு திருமுறைக்கலாமன்ற ஆய்வரங்கில் நடைபெறவிருக்கிறது.

தமிழர் நெறியாக சைவ சித்தாந்தத்தின் கொள்கைகளைப் பரப்பவும், ஆய்வு செய்யவும் இவ்விழாவில் கருத்துரைகள் இடம் பெறவிருக்கின்றன. (இ-3)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

நற்சமூக நடு நிலையம் நடத்திய சமூக தலைமைத்துவப் பயிற்சி நெறியில் (1988/89) பங்குபற்றிய பயிலுனருக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அருட்திரு. கலாநிதி எஸ். ஜே. இம்மனுவேல் இந்த வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (க)

## சித்தன்கேணி கலாநிலைய ஆதரவில் நாளை மறுதினம் சைவ மாநாடு

வட்டுக்கோட்டை சித்தன்கேணி கலாநிலைய ஆதரவில் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை திருமுறை இசை அரங்கு, பட்டிமன்றம் ஆகியவை கலாநிலைய முதல்வர் திரு. க. கயிலாயநாதன் தலைமையில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானத்தின் திருமுறை இசைஅரங்கை அடுத்து 'இன்றுள்ள சைவநடைமுறைகளில் திருத்தம் அவசியம்' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும்.

கலாநிதி சி. க. சிற்றம்பலம் நடுவராகக் கடமையாற்றுவார்.

பிற்பகல் 2.30 மணிக்கு பெரியபுராணம் காட்டும் பெண்கள்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாளர் திருவாட்டி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் விரிவுரை வழங்குவார்.

கலாநிலையத்தினர் வழங்கும் அருளிசை அரங்கில் நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ச)

## யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் - வரையுள்ளது கணக்காளர், உதவிக் காசாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைத் திகதி பின்போடல்

24- 06- 89இல் நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— பதில் பொது முகாமையாளர்.

யாழ்: ப. நோ. கூ. சங்கம் - வரையுள்ளது,
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
22- 06- 1989 (சி/2887)

## ஆறும் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
30 - 05 - 1912

விண்ணில்:
25 - 06 - 1983

திருமதி
**ஆகத்தம்மா சின்னப்பநாயகம்**


புனிதரின் உறவில் இறைவன் அன்புக் கரத்தில் வாழ்வு பெற வேண்டுகிறோம்.

இந்த நோக்கில் 24 - 6 - 89 சனிக்கிழமை காலை 6.15 க்கு, பாண்டியன்தாழ்வு - புனித அன்னு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிற் பங்குபற்றுமாறு, அன்பர்களை வேண்டுகிறோம். சமூகந்தர வசதி அற்றவர்களும் எமது கருத்தோடு ஒன்றிக்குமாறு,

பணிவன்புடன் கேட்டு நிற்கும்;
கணவர், மக்கள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்.

பாண்டியன்தாழ்வு,
36, சந்தன்னமாதா கோவில்வீதி,
யாழ்ப்பாணம். (11337)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
**பங்கிராஸ் ஏபிரகாம்லிங்கன்**
(BALAN)

தாயின் மடியில்: 11- 03- 1966
தனக்கென முடிவு: 23- 06- 1988

எங்கள் இதய விளக்கே ஏபிரகாம்! எங்களை விட்டுப் பிரிய நீ எங்ஙனம் துணிந்தாய்? நீ பிரிந்து ஒருவருடம் ஆகிவிட்டது! ஆனால் என்றும் எம் உள்ளத்தில் நீ உறைகின்றாய்! உன் எடுப்பான தோற்றம்! வசீகரமான முகம்!! புன்முறுவல் பூத்த வண்ணம் இருக்கும் உன் அதரம்!!! என்றுமே எம்முடன் இணைந்தே இருக்கும்.

இங்ஙனம்
உம் பிரிவால் துயருறும்;
அம்மா, அக்கா, அண்ணுமார், அண்ணி,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

''மலர் பவனம்''
தெல்லிப்பழை. (968)

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்



மலர்வு:
12 - 04 - 1919

உதிர்வு
24 - 05 - 1989


**பூவலிங்கம் சிவகஸ்தூரி**
(முன்னாள் முகாமையாளர் எயர் சிலோன்)

அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர் S. P. சிவகஸ்தூரி அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். 23- 06- 1989 வெள்ளிக்கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மறுநாள் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் பணிவுடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
திருமதி சிவகஸ்தூரியும், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 15, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். (952)

## 39 ஆம் நாள் நினைவஞ்சலி



**சின்னத்தம்பி மகாதேவன்**

தோற்றம்: 19- 05- 1959
மறைவு: 17- 05- 1989

சபிண்டீகரணக் கிரியை: 23- 06 1989

பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்
காலமெல்லாம் உங்கள் நினைவுடனே காத்திருப்போம்.
—குடும்பத்தினர்.

வரணி இயற்றாலை,
வரணி,
கொடிகாமம் (945)

## 49 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும்



நயினை
**கோபாலபிள்ளை பரமவேள்**

அன்னைமடியில்: 09 - 11 - 1972
ஆண்டவன் அடியில்: 07 - 05 - 1989

வாடாமலரே பரமவேளே
நீ எம்மை வாட விட்டுச் சென்றது ஏனோ?
உனை நினைத்துக் காலமெல்லாம்
கண்ணீரே கங்கையடா!

24 - 06 - 1989 இல் ஆத்ம சாந்திக்கிரியை நயினாதீவில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பிதழ் கொடுக்கமுடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம். இறுதிக் கிரியைகளில் கலந்து பலவித உதவிகளையும் செய்த யாபேருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
தந்தையார், தாயார், சகோதர,
சகோதரிகள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (C/221)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. வேலுப்பிள்ளை நடராசா**

தோற்றம்: 1917 - 08 - 10
மறைவு: 1989 - 05 - 23

உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தில் நிழலாகத் தெரிகின்றது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''தங்கவில்லா''
இல. 47, கி. வி. இட்டம்,
திருநெல்வேலி. (11339)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் வருட நினைவஞ்சலி

### C. P. அன்ரனி (கிறிஸ்ரி)

(இளைப்பாறிய அரசாங்க லிகிதர்)

மலர்வு: 26 - 01 - 1931 உதிர்வு: 23 - 06 - 1988



எம்மை ஆருத் துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவர் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
அன்பு மகன்.

இல.6, 6ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (11322)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



### திரு. சுப்பையா மகாலிங்கம்

(கிராமசேவை அலுவலர்)


அன்புடனும் பண்புடனும் பாரினிலே எங்களைப் பராமரித்த தெய்வமே! திங்கள் ஆறு சென்றாலும் தீராது எங்கள் துயர் தங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டிப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மக்கள்,
உறவினர்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [11319]

நினைவாக ஒரு நினைவு

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### ஸ்ரீ ரங்கநாதன் முருகதாஸ்

மலர்வு: 05 - 04 - 1962 உதிர்வு: 24 - 06 - 86

திதி: 23 — 06 — 1989

''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தோம்
நினையா தொரு போதும் இருந்தறியோம்''
உமது பிரிவை மறக்கவொண்ணாது தவிக்கின்றோம்.

கண்ணீரால் அஞ்சலிக்கும்
அப்பா, அம்மா, அன்புத்தங்கை,
உறவினர், நண்பர்கள்.

''ஆனந்த பவனம்''
கட்டுடை,
மானிப்பாய். (சி-2885)

## பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களின் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன.

விஞ்ஞானபீட முதலாம் ஆண்டுப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மீண்டும் முதலாம் ஆண்டில் விரிவுரைகளைத் தொடரவேண்டும் என விதிக்கப்பட்டுள்ள நடைமுறையை எதிர்த்தே விஞ்ஞானபீட மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர். (உ-3)

## கூட்டுறவு சபை ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் விசேஷ ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சிபார்சு செய்வது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட இருக்கிறது. (இ-3)

## மதுரகவிதைகள் வெளியீடு

குருநகர், ஜூன் 23

மதுரகவி இ. நாகராஜன் நினைவு குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டிப் பரிசளிப்பும், ''மதுரகவிதைகள்'' நூல்வெளியீடும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 - 30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பரிசளிப்புரை நிகழ்த்துவார்.

மதுரகவி இ. நாகராஜன் நினைவுப் பேருரையும்' ''மதுர கவிதைகள்'' நூல் வெளியீட்டுரையையும் திரு. க. சொக்கலிங்கம் ('சொக்கன்') நிகழ்த்துவார்.

ஆய்வுரைகளை திரு. மயிலங்கூடலூர் பி. நடராசன், கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் நடத்துவார்கள். (ச - 51)

## மாவு கொள்வனவு

தற்சமயம் இங்கு நிலவும் மாவு தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பலநோ. கூ. சங்கங்கள் திருகோணமலையில் உள்ள பிறிமா ஆலையில் தமக்குத் தேவையான மாவைக் கொள்வனவு செய்ய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பலநோ. கூ. சங்க முகாமையாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார். (ச-111)

## பாடசாலை கிரிக்கெட் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் 15, 17 வயதுப் பிரிவினருக்காக நடத்தப்படும் கிரிக்கெட் போட்டிகள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டவணையின்படி நடைபெறும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாத பாடசாலைகள் தாம் எதிர்த்து ஆடவுள்ள பாடசாலைகளுடன் கலந்தாலோசித்த பின்னர் யாழ். மாவட்ட மத்தியஸ்தர் சங்கத்துக்கும் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்துக்கும் அறிவிக்குமாறு யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கச் செயலாளர் என். சோமசுந்தரம் கேட்டுள்ளார். (இ-6)

## கோரப்படுகிறது

வடக்கு கிழக்கு மாகாண சபை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் திட்டமிடல் இளைஞர் விவகாரம் மனிதவலு அமைச்சு செயலாளருக்கு 30- 06- 89க்கு முன் விவரங்களுடன் அனுப்புதல் வேண்டும். (இ-21)

## நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



### Dr. முத்துச்சாமிப்பிள்ளை இராமநாதன் (R. M. P)

(இளைப்பாறிய பதிவு வைத்திய அதிகாரி)

தோற்றம்: 03. 06. 1927 மறைவு: 08. 06. 1989

அன்பு, பண்பு, அமைதி, சாந்தம் ஆகியவற்றை அணிகலன்களாகக் கொண்டு வாழ்ந்து, பண்பாலும், பாசத்தாலும் பல்லோர் இதயங்களிலும் பதிந்து விட்ட நீங்கள் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி எய்தி விட்டீர்கள்.

உங்கள் நினைவு எம்முயிர் உள்ளவரை நிலைத்திருக்கும்!
உங்கள் ஆத்மா ஆடவல்லான் திருவடிக் கீழ் அமைதியுறப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
— குடும்பத்தினர்

நன்றி 08. 06. 1989 இல் எம்மைவிட்டுப் பிரிந்த எமது அன்புத் தந்தையார் Dr. முத்துச்சாமிப்பிள்ளை இராமநாதன் அவர்கள் அரசினர் மருத்துவமனையில் சுகவீனமுற்றிருந்த பொழுது அவரைக் காப்பாற்றுவதற்காக அயராதுழைத்த டாக்டர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் ஈமக் கிரியைகளில் நேரில் கலந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதி யாத்திரையில் பங்கு பற்றியவர்களுக்கும், மலர்வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது இதயங் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றியுடன்
ஜோர்ச் செல்வகுமார் இராமநாதன்

389, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (11335)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை ஆனந்தன்

(பெரியமணி)

களஞ்சியப்பொறுப்பாளர் (S.K.)
[விவசாயத்திணைக்களம் கிளிநொச்சி]

தோற்றம்: 15-11-1934 மறைவு: 17-06-1987

திதி: 23 - 06 - 1989

எம்மை! ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டீர்களே! எம்மிடம் எதையும் கூறாமல் மின்னல் போல் மறைந்தீர்களே. உங்கள் இனிய முகம் என்று காண்போம்?

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
மைத்துனர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

[illegible]
இணுவில். (11317)

## கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

நெல்லியடி ம ம. வித்தியாலயம் அழிந்த கட்டடங்களை இடித்து அகற்றுவதுடன் அதிலுள்ள இரும்புப் பொருட்களை எடுத்துக் கொள்வதற்கான

### கேள்விகள்

மேற்படி வித்தியாலயத்தில் பின்வரும் கட்டிடங்களை இடித்து அகற்றி அவற்றிலுள்ள இரும்புப் பொருட்கள் தளபாடங்களை எடுத்துக் கொள்வதற்கான முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

(1) 58' / 33' மேல்மாடிக் கட்டடமும், அதன் சுற்றுடலும்,
(2) 80' / 20' தொழிற்கூடம்
(3) கூரையற்ற நிலையில் இருக்கும் 4 / 100' / 25' கட்டடங்கள்

கேள்விகள் 27 - 06 - 89 பிற்பகல் 2. 00 மணிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் 27 - 06 -89 பிற்பகல் 2. 00 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் யாழ் கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தி, பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

## யா / உடுப்பிட்டி அமெரிக்கமிசன் ஆண்கள் பாடசாலையில் இடிபாடுகளை அகற்றுதலுக்கான கேள்விகள்

யா / உடுப்பிட்டி அ. மி. ஆண்கள் பாடசாலை ஒரு பகுதி சேதமடைந்திருக்கும் மேல்மாடியில், சேதம் அடைந்த பகுதிகளை இரும்புக் கம்பியுடன் சேர்த்து அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. முத்திரையிடப்பட்ட கேள்விகள் 27 - 06 - 89 பிற்பகல் 2. 00 மணிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கேள்விகள் 27 - 06 - 89 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
(சி/2719)

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் உயர் திரு,

### காசிப்பிள்ளை பொன்னம்பலம்

அவர்கள்

தோற்றம்: 19- 05- 1903 மறைவு: 24- 05- 1989

24- 05- 1989 ஆம் திகதி சிவபதமடைந்த எம் குடும்ப தெய்வத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

23- 06- 1989 வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரது அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரர் பீட்டர்,

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (11333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் கண்டு திளைத்த காட்சிகள் யாவும் கதையாகிப் போனதடா......!



## செல்வன் அகிலன் திருச்செல்வம்

(சென். ஜோன்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்
மாணவர் தலைவன்; கிரிக்கெட் அணி உபதலைவர்
(PREFECT)   (VICE CAPTAIN — CRICKET TEAM))

**தமிழனாக**
**05 - 05 - 1970**

செந்தமிழின் சாற்றைப் பிழிந்தே 'அகிலன்' எனத்
தந்தை தாய் ஈந்தார் தரும் நாமம் —''முந்தி
அவையத் திருத்தினர்''; ''என் நோற்றார் கொல்?'' என்று
உவகை அவர்க்கு ஊட்டினாய்; உட்கோள் — கலையாகிக்
கொம்பாய், விழுதாய்க் கொடுத்த பெயர்ப் பண்பெல்லாம்
செம்பாதி சாதித்துத் தீட்சை பெறும் — பின்பாதித்
தேரோட்டப் பண்டிகைக்குத் தேதி வைத்து, தீர்த்த விழா
வேரோட்டம் கொள்கின்ற வேளையிலே — நீரோட்டம்
சுற்றிச் சுழி மாறிச் சூதியற்றிப் போனதையா!
''வெற்றி, விழுந்தாலும் எழும் வீரனுக்கு'' என்று — ஒற்றை தொறும்
மந்திரம் போல் என்றும் வரைந்து அவ் வழி நடந்தாய்!
செந்தமிழே உள்ளடக்கமாய்த் திகழும் — சுந்தரப் பேர்
ஆகும் ''அகிலன்'' அகரம் முதல் எழுத்து;
பாகுத் தமிழுக்கும் அப்படியே! வாகான
இன் எழுத்தாம் இ ''ன்'' னன்ன. ஈற்றெழுத்தாம் ஈர் பேர்க்கும்;
என்ன பொருத்தமையா! ''கி'' னவும் — பின்னாலே
''லா'' னவும், இ ''ன்'' னும், வரிசையாய் வல், இடை, மெல்,
ஆன இன அட்சரங்கள்! ஆகா! விஞ் - ஞானத்
தமிழே அடக்கம், மலர்த் திருச் செல்வத்து
அமிழ்தாம் உன் நாமத்துள் என்றோ? — தமிழ் மட்டும்
தானா உன் ஆளுமைக்குட் பட்ட தனிச் சிறப்பு?
ஆனைப் பட்ட கல்வி மான்களுமே — பூணா
ஒழுக்கம், அடக்கம், உணர்வு, திறன்கள்,
விழுப்பம் முதிர்ந்த கண் ணோட்டம் — எழுப்பங்கள்
காட்டாமல், பாராட்டு, கண்டனம் இரண்டையுமே
வேற்றாக்கிக் காணா விறல் ஆண்மை, — தோற்றத்து
எளிமை, பணிவு, மற்றும் எல்லாத் துறையும்
பொழிவாகத் தேரும் பூ ராயம், — மொழி ஆற்றல்!

**தமிழுக்காக**
**10 - 05 - 1989**

ய விலுமே தீராத யாக் கொண்டு ஒழுகினையே!
பாவிலும் பேச்சிற் படிப்பினிலும் — மேவி வரும்
ஓராம் பரிசுகள் ஒவ் வோராண்டும் உன் வசமே!
சீராய்த் துடுப்பெடுத்துச் சென்றாயேல் — பாராத
கண்கள் என்ன கண்கள்? களரி அதிருமே
விண் கூவும் உன் பந்து வீச்சிலே! — என் விதமாம்
அத்தனை பாடங்களிலும் நூன சித்தி பெற்றுயர்ந்த
வித்தகனாய், மைதான வீரனாய், — பெற்றோன்
இருக்கும் வணமாய். இராவணனின் மைந்தன்
வருக்கத்தில். இந்திரசித் தன் போல், — செருக்களத்தில்,
தன் உயிர் தந்தைக்கீடாய்த் தந்த தியாகச் சுடரே!
முன் நடந்து காட்டும் முதல்வனே! — என்ன இடர்
வந்தாலும் தூர்த்து வழி நடத்தும் கூர்த்த மதி
விந்தைத் தலைமகனே! வெற்றி அன்றி — எந்தக்
களத்திலும் தோல்வியே காணாத தீரா!
''உளத் தீயை மூட்டி நாம் ஓமம் — வளர்த்தே அக்
குண்டத்துள் உன்னைக் கொலத் துணிந்த குண்டர்களைத்
துண்டு துண்டாய் வெட்டியே, கொப்பாட்டன் — தொன்று வழிப்
பாட்டன் முதலாய்ப் பரம்பரையர் ஈறாகப்
போட்டே எரித்துப் பொசுக்குவோம்! — காட்டீர்
அடையாளம்'' என்று துடித்து ஆணையிடும் செல்வர்
விடை கேட்கின் றார்: அகிலா! ''வேண்டாம்! — கடை மாந்தர்
செய்ததை நாமும் திருப்பிச் செய்தால் அது கீழ்மை!
உய்து பிழைக்கட்டும்! ஓட விடும்! — தெய்வமே
தீர்ப்பளிக்கும்'' என்றா உன் சிந்தா மணிச் சிரிப்பால்
காப்பளித்தெம் நெஞ்சத்தைக் கட்டுகிறாய்? — ஏற்போம்! உன்
காந்தி முகத்தில் ஒளிர் சாந்தி ஈழத்தில் இனி
வாழ்ந்திட உன் வாழ்வே வழி!

## இன்று (23-06-1989) அகிலன் கதையாகிப் போன நாற்பத்தைந்தாவது நாள்

என்றும் அகிலன் நினைவுகளுடன் வாழும்

**எஸ். திருச்செல்வம்** (அன்பான அப்பா) **ரஞ்சிதமலர் திருச்செல்வம்** (அன்புக்கினிய அம்மா)

அங்கிள்மார், அன்ரிமார், கிரான்ட் மம்மி, சித்தப்பா, பெரியம்மா, சின்னஅம்மா,
அப்பா-அம்மா வழிச் சகோதர-சகோதரிகள், ஆருயிர் நண்பர்கள்,
[illegible] தோழர்கள், உற்றார், உறவினர்கள்.

C/2720

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்.

பொருள்:

ஒருவனுக்கு ஒளி ஊக்கமிகுதியே ஆகும்; ஒருவனுக்கு இழிவு அந்த ஊக்கம் இல்லாமலே உயிர் வாழலாம் என்று எண்ணுதலாம்.

உதயன்
இல: 393/3, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22078
23 - 06 - 1989   நா: பெ: இல: 28

# தட்டுப்பாடு ஒரு சாபக்கேடா?

சில தினங்களுக்கு முன்னர் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவியது. விலையை அதிகரித்து விற்கும் நோக்கத்துடன் சில வர்த்தகர்கள் கோதுமை மாவைப் பதுக்கினர். சிலர் அதிகரித்த விலையில் விற்றனர். தற்போது கோதுமை மாவுத் தட்டுப்பாடு நீங்கிவிட்டது. விலையும் பழைய நிலைக்கு இறங்கி விட்டது.

மாவுத் தட்டுப்பாடு நீங்க தற்போது மற்றொரு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதுதான் எரிபொருள் தட்டுப்பாடு.

நேற்று முன்தினம் முதல் எரிபொருள் நிலையங்களில் வாகனங்கள் கியூவில் நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதுவும் வாகனம் ஒன்றுக்கு இவ்வளவுதான் என்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. மதியத்துக்குப் பின்பு பெரும்பாலும் முழு எரிபொருள் நிலையங்களிலுமே ''எரிபொருள் இல்லை'' என்று எழுதிப் போடப்பட்ட அட்டையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலைமை நமது மண்ணில் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. 1983 ஆம் ஆண்டு தமிழ்ப்போராட்டம் உத்வேகம் அடைந்த நாளில் இருந்தே நிலவி வருகிறது.

இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா அரசு வடக்கில் பெரும் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி இருந்தது. அப்போது எரிபொருள், மாவு மட்டும் அன்றி மற்றைய அத்தியாவசியப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அது போன்ற பெரும் பாதிப்பு தொடர்ந்து அடிக்கடி ஏற்படாத போதிலும், தெற்கு நிலைமையைச்சாட்டி இங்கு அவ்வப்போது தட்டுப்பாடு, பற்றாக்குறை நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டிய பொறுப்பு சகல தரப்பினர் கைகளிலும் இருந்து வருகிறது.

தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் ஏனைய பொருள்களைப் போலல்லாது எரிபொருள் தட்டுப்பாடு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவது கண்கூடு.

போக்குவரத்து கட்டணங்கள் முதல் மீன் விலை வரை உயர்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அமைகிறது.

அதுமட்டும் அன்றி மக்கள் மண்ணெண்ணெய்மற்றும் காஸ் போன்ற பொருள்களையும் அளவுக்கு மிஞ்சி கையிருப்பில் வாங்கி வைக்க முயற்சிக்கும்போது செயற்கையான தட்டுப்பாடும் உருவாகிறது.

இப்படியான தட்டுப்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு இவற்றைப் போதிய அளவு களஞ்சியப் படுத்துவது அவசியம் ஆகும்.

வடபகுதியில் உள்ள களஞ்சிய வசதிகளை முற்றாகப் பயன்படுத்தி இத்தகைய தட்டுப்பாட்டு நிலைமையை எதிர்கொள்ளக்கூடிய திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். தேவை ஏற்படும் பட்சத்தில் மேலதிக களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துவதற்கும் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்டோர் கவனிப்பார்களா?

### மாணவருக்கு பணமா? உணவா?

# மாவட்ட கல்விப்பணிப்பாளருக்கு முடிவு செய்யும் அதிகாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

மதிய உணவுத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பணம் வழங்குவதா? உணவு வழங்குவதா? என்ற விடயங்களில் முடிவு எடுக்கும் பொறுப்பு மாவட்டகல்விப் பணிப்பாளர்களுக்கே வழங்கப்பட்டது.

அதன்படி வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உணவு வழங்கவேண்டும் என்று தீர்மானித்துள்ளார்.

இப்படிக் கூறினார் கல்வி அமைச்சு கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம்.

மதிய உணவுத் திட்டம் சம்பந்தமாக நேற்று முன்தினம் யாழ்-கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்-மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இலங்கை முழுவதிலும் 40 லட்சம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் மதிய உணவு இன்றிக் கஷ்டப் படுகிறார்கள்.

இதனால் அவர்கள் கல்வியில் குறைந்தவர்களாகவும், போசாக்கு அற்றவர்களாகவும் வாழவேண்டியுள்ளது.

இம்மதிய உணவுத் திட்டத்தின் மூலம் போசாக்கு இன்மையை போக்கலாம். நல்ல அறிவுள்ளவர்களை உருவாக்கலாம்; சமூகத்தையும், பாடசாலையையும் இரண்டறக் கலக்கச் செய்யலாம். உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உயர்த்தலாம். இந்நோக்கங்களுக்காகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மூலம் மறைமுகமாக சுகதேசிகளான சமுதாயத்தை உருவாக்க முடியும். இத்திட்டம் ஒரு தேசிய முதலீடு.

இத்திட்டம் கல்வி அமைச்சரால் தீட்டப்பட்டாலும், பல்வேறு மட்டங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. சகலரும் அறியும் வகையில் ஒளிவு மறைவின்றி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (-3)

## நெல்லியடிச் சந்தி

வடமராட்சி ஜூன் 23

நெல்லியடிச்சந்தியில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தைச் சுற்றித் தற்போது முட்கம்பி வேலிகள் போடப்பட்டு பாதுகாப்பு கூடுகளும் அமைக்கப்பட்டு வருவதால் வாகனங்கள் யாவும் சந்தியிலிருந்து சற்றுத் தொலைவிலேயே தரித்துச் செல்கின்றன. (க-160)

### வருகிற ஜூலை முதல்

# வீஸா இன்றி அமெரிக்கர்கள் நிக்கரகுவா செல்லத் தடை

ஹவானா, ஜூன் 22

வருகிற மாதம் முதலாம் திகதி தொடக்கம் வீஸா இன்றி அமெரிக்கப்பிரசைகள் நிக்கரகுவா செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிக்கரகுவாவின் உள் விவகாரங்களில் அமெரிக்கப் பிரசைகள் தலையீடுசெய்வது அதிகரித்து வருவதாகவும் அதைத் தடுக்கவே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாகவும் நிக்கரகுவா வெளியுறவு அமைச்சு விடுத்தஅறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டன் அரசு தனது அரசியல் தத்துவார்த்த மற்றும் பிரசார ரீதியான தலையீடுகளை அதிகரித்து வருகிறது. இதில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டியிருப்பதாக நிக்கரகுவா அதிபர் டானியல் ஒற்றேகா கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார். (எ)

# பாக்-நேபாளம் ராஜீய உறவு!

இஸ்லாமபாத், ஜூன் 22

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் இன்று வெள்ளிக்கிழமை நேபாளம் செல்லவிருக்கிறார்.

நேபாளத்துக்கு கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது. அதனைத் தீர்க்க என்ன செய்யலாம் என்பதை அறிந்து கொள்ளவே இந்த விஜயத்தை மேற்கொள்ளுவதாக அமைச்சர் யாகுப்கான் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். நேபாளத்துடன் பாகிஸ்தான் நெருங்கிய ராஜீய உறவுகளை வைத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய பின்னர் பாகிஸ்தான் பிரதமர் பெனசிர் பூட்டோ, பொருளாதாரத்தடை காரணமாக நேபாளம் அடைந்துள்ள நெருக்கடி பற்றிக் கவலை தெரிவித்திருந்தார்.

சார்க் அமைப்பு நாடுகளின் நடப்பு ஆண்டுத் தலைவராக பாகிஸ்தான் இருக்கிறது. (எ)

# சூடான் அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சி முறியடிப்பு!

ஆட்சியைக் கவிழ்க்கும் சதி முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டதாக சூடான் அரசு அறிவித்தது.

எகிப்தில் தஞ்சமடைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி நிமெய்ரிக்கு விசுவாசமான அரசியல் வாதிகளும் இராணுவ அதிகாரிகளும் இந்தச் சதி முயற்சியை மேற்கொண்டனர் என்று சூடான் இராணுவத் தலைமையகம் அறிவித்தது.

சம்பந்தப்பட்டோர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக பிரதமர் சாதிக் அல் மஹ்தி தலைமையிலான சிவில் அரசு சூடானை ஆட்சி செய்து வருகிறது. (எ)

### வளைகுடாவில் மாஸ்கோவின் செல்வாக்கு:

# சோவியத்துடன் இராணுவ-ஆயுத உடன்பாடு காண ஈரான் தீவிரம்!

மாஸ்கோ, ஜூன் 22

சோவியத் யூனியனுடன் இராணுவ - ஆயுத உடன்படிக்கை ஒன்றை ஈரான் கைச்சாத்திடலாம் என்று ராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஆயதுல்லா கொமேனியின் மறைவின் பின்னர் ஈரானின் வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதை இது பிரதிபலிக்கிறது என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கொமேனியின் மறைவின் பின்னர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த ஈரானின் உயர்மட்டத்தலைவர் ரஸ்வன்ஜானி, ஏற்கனவே சோவியத் யூனியனுடன் வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான விவகாரம் ஆகிய துறைகள் சம்பந்தமாக பல உடன்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

சோவியத் யூனியனுக்கு பெருமளவில் எரிபொருளை விற்க ஈரான் ஒப்புக்கொண்டிருக்கிறது.

அதே வேளை, 8 ஆண்டுகால வளைகுடா யுத்தத்தினால் சீரழிந்த ஈரானைக்கட்டி எழுப்பத் தேவையான பொருளாதார உதவிகளை வழங்க சோவியத் யூனியன் முன்வந்து உள்ளது.

இருதரப்பு உறவில் காணப்பட்ட இந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்துஈரான் தலைவர் ரஸ்வன்ஜானி, மாஸ்கோ விஜயத்தை மேலும் சில தினங்களுக்கு நீடித்துள்ளார்.

சோவியத் யூனியனுடன் இராணுவ-ஆயுத உடன்பாடு ஒன்றைச்செய்து கொள்ளுவதற்காகவே ஈரான் தலைவர் தனது விஜயத்தை நீடித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது:

சோவியத் இராணுவ தளபதி ஒருவர் தகவல் தருகையில், அப்படி ஓர் உடன்பாடு ஏற்படுவது சாத்தியமானதே என்று தெரிவித்தார் என்று பி. பி. சி. அறிவித்தது.

ஈரான் - சோவியத் உறவில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கம் ஆப்கன் பிரச்சினையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆப்கன் கெரில்லாக்களில் ஒரு பிரிவினர் தெஹ்ரானில் முகாமிட்டு இயங்கி வருகின்றனர் என்பது தெரிந்ததே.

அதே வேளை, சோவியத் யூனியனில் கலவரங்களில் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் மத்தியில் ஈரானுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ள சோவியத் அரசு விரும்புகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# அதிபர் ஸியாவின் மரணத்தின் பின்னால் அமெரிக்க அரசு?

### பாக், நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

இஸ்லாமபாத், ஜூன் 22

அதிபர் ஸியா-உல்-ஹக்கின் மரணத்தில் அமெரிக்கா சம்பந்தப்பட்டுள்ளது என்று அவாமி தேசியக் கட்சித் தலைவர் கான் அப்துல்வலிகான் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இக் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

எல்லைக் காந்தியின் மகனான அவர் மேலும் சொன்னதாவது:

அமெரிக்காவின் தூண்டுதலால்தான் அதிபர் ஸியா கொல்லப்பட்டார் என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஒருவர்என்னிடம் சொன்னார். அதற்கு சாட்சியங்கள் தன்னிடமிருப்பதாகவும் அந்தளபதி தெரிவித்தார்.

தனது நலனுக்காக தலைவர்களைப் பயன்படுத்துவதும் அது நிறைவேறிய பின்னர் அவர்களைத் தூக்கி எறிவதும் அமெரிக்காவின் பழக்கம் — இப்படி ஜனப் வலிகான் மேலும் சொன்னார். (எ)

## பலஸ்தீனியர் இருவர் கொலை!

டெல்அவிவ், ஜூன் 22

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இரண்டு பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். (எ)

# சூழலை மையமாக வைத்து ஆய்வுகள் நடைபெற வேண்டும்

### புவியியலாளன் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 23

'விவசாய அபிவிருத்திக்குச் சிறப்பு அம்சமாக விளங்குவது நிலப்பயன்பாடு; நீர், நிலவள மூலவள அபிவிருத்தியுடன் சூழல் பாதிப்பையும் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் சூழலை மையமாக வைத்து எமது ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் 'யாழ்ப்பாணப் புவியியலாளன்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியீட்டு வைத்து வெளியீட்டுரை வழங்கும் போது கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு புவியியற் கழகத் தலைவர் திரு. கே. தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை அறிமுகவுரை வழங்கினார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் வெளியீட்டுரை வழங்கினார்.

பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தமது உரையில் மேலும் கூறியதாவது;

எமது நாட்டில் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு இன்னும் பிறக்கவில்லை. எமது ஆய்வுகளில் இத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். புவியியல் பீடம் ஆய்வு முயற்சிகளுக்குக் கொடுக்கும் ஊக்கம் பாராட்டற்குரியது; 'புவியியலாளன்' ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயனுடைய கை நூலாகும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது;

'இன்றைய வெளியீடு எங்கள் பிரதேச அபிவிருத்திக்கு கருப்பொருளாக அமையக்கூடிய வெளியீடாகும். இதன் ஆரம்ப முயற்சி போற்றுதற்குரியது. பிரதேச அபிவிருத்திக்கு திட்டமிடல் ஒரு முக்கிய பகுதியாகும்.

எமது வளங்களின் கொடையைக் கருத்தில் கொண்டு [illegible] இனம்காண வேண்டும். எமது நாட்டில் தேசிய அபிவிருத்தியின் கூ[illegible]க பிரதேசஅபிவிருத்தி அமையவில்லை. பொருளியல் ரீதியாக நோக்கும் பொழுது எமது பிரதேசம் புறக்கணிக்கப்பட்டுள்ளது கண்கூடு.

அதிகார பரவலாக்கத்தையும் அபிவிருத்தியின் ஓர் அங்கமாகக்கொள்ள வேண்டும் எமது பிரதேச அபிவிருத்தி முயற்சிகளில் காணப்படும் குறைபாடுகளில் ஒன்று உள் கட்டுமானம் இல்லாமை

எமது அமைப்புக்களான வங்கி போக்குவரத்து நிபுணத்துவ ஆலோசனைகள் ஆகியன சீர்குலைந்துள்ளன. பொது சனத் தொடர்புச்சாதனங்கள் கூட விருத்தி அடையாத நிலையிலேயே காணப்படுகின்றன

இப்படி அவர் கூறினார்.

கலாநிதி சபா. ஜெயராஜா ஆய்வுரை வழங்குகையில் ''புவியியலை மையமாக வைத்தே ஆய்வுகள் நடைபெறுகின்றன. இவ் ஆய்வுகளில் ஆற்றல் ஒன்றிணைப்பு இல்லாமை பெரும் குறையாகவிருக்கின்றது. எமது சொற்பிரயோகங்களில் கூட ஒன்றிணைப்பு இல்லை எனக் கூறினார். (ச)

## கந்தபுராண பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் நீராவியடி அருள்மிகு ஸ்ரீ ரகுநாத விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை அடுத்து தினமும் சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப் பெற்று வந்த ''கந்த புராண'' தொடர் பிரசங்கம் இன்று வள்ளி திருக்கல்யாணத்துடன் பூர்த்தி அடைகிறது.

திரளான அடியார்கள் கூட்டம் தினசரி இக் கந்த புராண விரிவுரையைக் கேட்டு இன்புறுகின்றது. (இ)

## வெளிமடை

பருத்தித்துறை ஜூன் 23

நெல்லண்டை தும்பளை பருத்தித்துறை தோட்டக் கடவை நரசிங்க வயிரவர் கோயில் வருடாந்த வெளிமடை நாளை சனிக்கிழமை நடைபெறும். (க - 118)

## வருடாந்தப் பொங்கல்

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவுப் பகுதியில் பிரசித்தி பெற்ற வட்டுவாகல் சப்தகன்னியர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் 26ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் (க- 92)

## அச்செழு வைரவர் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

அச்செழு அருள்மிகு நரசிங்க வைரவர் கோயில் வருடாந்தப் பொங்கல் விழா நாளை 24ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது. (க)

## லயன்ஸ் பதவி ஏற்கும் வைபவம்

யாழ். லயன்ஸ் கழகத்தின் புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்கும் வைபவம் நாளை 24 ஆம் திகதி சுபாஸ் ஹோட்டலில் நடைபெறவிருக்கிறது.

இவ் வைபவத்தில் லயன் சி. மகேசன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## தீ மிதிப்பு வைபவம்

மண்டைதீவு கண்ணகை அம்பாள் கோவில் தீமிதிப்பு வைபவம் 19 ஆம் திகதி நடைபெற்றது.

அத்தருணம் மண்டைதீவு சைவ வளர்ச்சிக்கழகத்தினரின் சிலம்பின் - ஒலி - என்ற கருத்தரங்கம் அதன் தலைவரும் ஓய்வு பெற்ற அதிபருமான திரு. ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. (க)

### சுண்டுக்குளி

# திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் பிறப்புப் பெருவிழாப் பூசை நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டுக் கலை அரங்கில் ஒப்புக்கொடுக்கப்படும்.

யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுப்பு நடைபெற்ற பின் சுரூப பவனி இடம்பெறும்.

மாலை 5.30க்கு திருமுழுக்கு அருளப்பர் 'ஆலய நூற்றாண்டு சிறப்பு மலர்' வெளியீடும், 1893 ஆம் ஆண்டு முதலியார் யோசவ் புவிமனசிங்கியால் இயற்றப்பட்ட சஞ்சுவாம் அம்மானை நூல்வெளியீடும் இடம்பெறும்.

தொன்மைமிக்க சஞ்சுவாம் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு நூற்றாண்டு பூர்த்தியாகும் இவ் வேளையில் பல்வேறு புனருத்தாரண வேலைகள் நடைபெறுகின்றன எனவும் புதிய பங்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது எனவும் அறிய வருகின்றது.

பங்குத்தந்தை அருட்கலாநிதி இரா. யோசவ் அடிகளும் செயலாளர் திரு. சலமோன் சிறில் மற்றும் ஆலயப் பரிபாலன உறுப்பினர்களும் இந்த ஆலயத்தின் பணிகளைச் சிறப்புறச் செய்து வருகின்றார்கள்.

புதிய வழிபாட்டுக்கலை அரங்கு பொறியியலாளர் ராஜன் டொமினிக் குடும்பத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. (இ 3)

## 'பொன்மாரி' நூல் வெளியீடு

பருத்தித்துறை, ஜூன் 23

கவிஞர் துன்னையூர் திரு. சி. செல்லமுத்துவின் 'பொன்மாரி' நூல் வெளியீட்டு விழா 25 ஆம் திகதி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மண்டபத்தில் கலாநிதி வித்துவான் க. ந. வேலன் தலைமையில் நடைபெறும்.

ஸ்ரீமத் ஆதிசங்கராச்சாரியார் வடமொழியில் எழுதிய கனகதாராவின் தமிழாக்கமே 'பொன்மாரி' நூல் ஆகும்.

வடமொழியில் உள்ள கனகதாராவை தமிழ் பாடங்களில் கவிஞர் துன்னையூர் திரு சி. செல்லமுத்து பொன்மாரியாகவும் ஸ்ரீமத் ஆதிசங்கரின் 1200 ஆவது ஆண்டு நினைவு மலராகவும் தந்திருக்கிறார். (க-118)

# யாழ் தபால் சேவைக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் கிடைக்காமல் போகும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் பிராந்திய தபால் சேவைக்கு என ஒதுக்கப்பட்ட வாகனங்களைப் பொறுப்பெடுப்பதற்கு அதிகாரிகள் இல்லை என்று கூறப்படுகிறது.

மொத்தம் ஐந்து வாகனங்களை புனர்வாழ்வு அமைச்சு தபால் திணைக்களத்துக்கு வழங்குவதற்கென ஒதுக்கியுள்ளது.

எனினும் வாகனங்களைப் பொறுப்பெடுத்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் இல்லாததால் இந்த வாகனங்கள் வேறு பகுதிகளுக்கு வழங்கப்படலாம் என அஞ்சப்படுகிறது.

வாகனங்களை கொழும்பில் இருந்து கொண்டு வருவதற்கு வாகனச் சாரதிகள் தயார்நிலையில் உள்ளனராம். எனினும் அதிகாரிகள் இல்லாததன் காரணமாக கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/மாவட்ட பாடசாலைகளுக்கு

ஓர் நற்செய்தி

மதிய உணவு திட்டத்திற்கேற்ப நீங்கள் ஓடர் செய்யும் 'ஜீவாகாரத்தை'

உங்கள் பாடசாலைகளிலேயே விநியோகம் செய்வதோடு விலையும் குறைத்துள்ளோம்.

மேலும் விபரங்களுக்கு:

அண்ணா தொழிலகம்
இணுவில்.



# உதயன்

23 - 06 - 1989 வெள்ளிக்கிழமை



பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு திட்டத்திற்கு உகந்தது

"ஜீவாகாரம்"

இதில் தேவையான அளவு கலோரி புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கியுள்ளது.

அண்ணா தொழிலகம்
இணுவில்.


பயணிகள் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்து

## பலாலியிலிருந்து இரத்மலானைக்கு மேலதிகமாக விமான சேவைகள்

யாழ் — கொழும்பு விமான சேவையின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அதிகரித்து வரும் பயணிகள் எண்ணிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பலாலியில் உள்ள விமானப்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேலதிக விமான சேவைகளை உடனுக்குடன் நடத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

கடந்த சில தினங்களாகத் தினசரி சுமார் 150இற்கும் அதிகமானோர் இந்த விமான சேவையைப் பயன்படுத்தி பலாலியிலிருந்து இரத்மலானைக்குப் பயணம் செய்து வருகின்றனர். அதனால் கடந்த இரு தினங்களாக தினசரி ஒரு சேவைக்குப் பதிலாக மேலதிகமாக ஒரு விமான சேவையை, பலாலியில் உள்ள விமானப் படை உயரதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதேவேளை பலாலி — இரத்மலானை சேவையில் ஈடுபட்டிருக்கும் "வை - 8" விமானத்தில் இதுவரை பொருத்தப்பட்டிருந்த 40 ஆசனங்களுக்கு மேலதிகமாக 40 ஆசனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

பாரிய பொருள்களை ஏற்றி இறக்க பயன்படுத்தப்பட்ட இந்த விமானத்தில் —

இரத்மலானை — பலாலி சேவையில் அதிக பயணிகள் சென்று வருவதை அடுத்து புதிதாக பயணிகளுக்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

"இந்த விமானத்தில் பயணம் செய்ய விரும்புவோர் தாம் பயணம் செய்யும் தினத்திற்கு முதல்நாள் — பதியத்திற்கு முன்பாக — பலாலி விமான நிலைய முகப்புச் சந்தியில் உள்ள "ஹெலி டூர்ஸ்" கொட்டகையில் இதற்கென தங்கியிருக்கும் விமானப்படை அதிகாரிகளிடம் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் —

பெயர் விவரங்களைப் பதிவு செய்யும் அனைவருக்கும் விமானப் பயண வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் —

தேவைப்பட்டால் மேலதிக விமான சேவைகளை உடனுக்குடன் ஒழுங்குபடுத்த முயற்சி எடுக்கப்படும் என்றும் விமானப் படை அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ)

## ஒன்றுக்குப் பதில் மற்றொரு வெளிநாட்டுப் படை வேண்டாம்

### தினேஷ் குணவர்த்தன சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் இருந்து ஒரு வெளிநாட்டுப் படையைத் திருப்பி அனுப்ப, இன்னொரு வெளிநாட்டுப் படையை இங்கு கொண்டு வர வேண்டியது அவசியமில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

— இப்படி மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமைதிப் படையை திருப்பி அனுப்பவேண்டும் என்பதில் தேசியக் கருத்து உடன்பாடு ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுப் படை இங்கு இருப்பதால் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன; தீர்ந்தபாடாக இல்லை —

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் தான் அமைதிப்படை இலங்கைவந்தது — என்றும் திரு. தினேஷ் குணவர்த்தன தமது அறிக்கையில் தெரிவித்தார். (அ-எ)

## எரிபொருள் பற்றுக்குறை ஏற்படக் காரணம் இல்லை!

### அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு என்று கூறுமளவுக்கு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைமை மோசமடையக் காரணம் இல்லை என்று யாழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

நகரில் நேற்று எரிபொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவியது. கள்ளச் சந்தையிலும் கூட எரிபொருள் கிடைப்பது அரிதாக இருந்தது. பெற்றோல் லீற்றர் 35 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன.

இந்தக் கஷ்டங்களை அனுசரித்து, உண்மையான நிலை என்ன என்று பிரஸ்தாப உயர் அதிகாரியிடம் உதயன் செய்தியாளர் வினவினார்.

அதற்கு அவர் தெரிவித்ததாவது:-

நகரில் தினமும் சராசரி மூன்று முகவர்களுக்கு மாறி மாறி எரிபொருள்கள் விநியோகம் செய்து வருகிறோம்;

எரிபொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கும் விதத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடாநாட்டின் எல்லா முகவர்களுக்கும் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் — என்றார்.

இதே வேளையில் நேற்று யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள பெற்றோல் விற்பனை நிலையம் ஒன்றில் நீண்ட கியூ காணப்பட்டது; அதே வேளை கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள பெற்றோல் விற்பனை நிலையம் ஒன்றில் பெற்றோல் இருந்தபோதிலும் கூட்டம் எதுவும் இருக்கவில்லை. (அ-9)

### அமெ. பெண்ணின் சடலம் அல்ல

கொழும்பு, ஜூன் 23

நுவரெலியாவில் காணப்பட்ட சடலம், காணமற்போன அமெரிக்கப் பெண் சன்ரா வலன்டைனுடையது அல்ல என்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். எஸ். எல். சல்காது அறிவித்திருக்கிறார். (உ-எ

## தீவிரவாதிகளுக்கெதிராக கடும் நடவடிக்கை!

### அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

லண்டன், ஜூன் 23

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து தீவிரவாதிகளுக்கு எதிராக இலங்கை அரச படைகள் கடும் நடவடிக்கை எடுக்கும்.

— வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

1971ஆம் ஆண்டில் தீவிரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கை போன்று இம்முறையும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு ஏற்ற வகையில் படையினருக்கு அவசர காலச் சட்டத்தின் கீழ் அதிக அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன — என்று அவர் மேலும் சொன்னார். (உ-9]

### தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடந்த சில தினங்களாக வடபகுதிக்கு வந்து சேராமலிருந்த தென் பகுதி தபால் பொதிகள் நேற்று வந்து சேர்ந்தன.

இந்தப் பொதிகளில் அதிகளவில் கொழும்பு தபால்களே அடங்கியிருந்தன.

தென் பகுதியில் போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து தபாற் சேவையும் பாதிப்படைந்துள்ளது. (உ-9)


இம்மாத இறுதியில் நிகழும்

வியாழ மாற்றம்

அதனால் பன்னிரு ராசிகளுக்கும்

ஏற்படப்போகும் பலன்கள்

நாளைய "சஞ்சீவி"யில்

விவரம்


## உலக சந்தையில் சீனி விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 23

கடந்த வாரம் சர்வதேச சந்தையில் சீனி விலை ஒரு மெட்ரிக் தொன் 398 அமெரிக்க டொலராக உயர்ந்தது.

இவ் விலை உயர்வு உள்நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இலங்கை சீனி இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் திரு. கரு. ஜெயசூரியா தெரிவித்தார். (உ-எ)

## டாக்டரை காணவில்லை!

வவுனியா, ஜூன் 23

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றும் டாக்டர் பரமகுரு இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவருக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. (உ-164)

## பல்கலைக்கழக பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்-பல்கலைக்கழக மாணவர்கள் தமது விரிவுரைகளைக் நேற்றுப் பகிஷ்கரித்தனர்.

பாடசாலை மாணவர்கள் நடத்திவரும் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்தே பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். (உ-3)

## 350 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஊழியர் சேமலாப நிதியில் இருந்து வீடு கட்டக் கடன் பெறுவதற்கு யாழ். மாவட்டத்தில் 350 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

### வவுனியாவில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தது:

இதனிடையில் இந்த மோதல்களின் பின்னர் இடம்பெற்ற தேடுதலின் போது சாஸ்திரி கூழாங்குளத்தில் வீடுகளில் இருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்வாசிகள் தெரிவித்தனர். அத்துடன் ஒரு கல்வீடு சேதமாக்கப்பட்டது. மற்ற ஒரு வீடு எரிக்கப்பட்டது.

இதேசமயம் ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் ஆகிய பகுதிகளிலும் புதனன்று மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

இதேவேளை கடந்த 21ஆம் திகதி (புதன்கிழமை) 24 மணி நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 18 பேர் உயிரிழந்ததாகவும், மூன்று பேர் கைது செய்யப்பட்டதாகவும் இந்திய அமைதி காக்கும் படையினர் விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்ததாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

சாஸ்திரி கூழாங்குளத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் ஒரு இயந்திரத்துப்பாக்கியும் வானொலிகருவிகளும் கைப்பற்றப்பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது. (உ-64)

## கடைகள் தொடர்ந்து பூட்டிய நிலையில்

வடமராட்சி, ஜூன் 23

நெல்லியடிப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

இம்மாதம் 13ஆம் திகதி நெல்லியடியில் இரண்டு வர்த்தகர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

காய்கறிச் சந்தை, மீன் சந்தை ஆகியன நாவலர் மடத்தடி, வதிரிச் சந்தி, மாலிச்சந்தி, கன்பொல்லை, அரசடி ஆகிய இடங்களில் வீதியோரங்களில் நடைபெற்று வருகின்றன. (அ-160(

### எயிட்ஸ்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

வெளிநாடுகளில் பல ஆண்டுகள் தங்கியிருந்து நாடு திரும்பிய இலங்கையர் பலருக்கே எயிட்ஸ் நோய் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டிருப்பதாகவும் பிரஸ்தாப அறிக்கை விவரிக்கிறது. (அ-10)

## மா ஏற்றி வருவதற்கு 44 லொறிகளுக்கு அனுமதி

திருகோணமலையில் இருந்து மா எடுத்து வருவதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் திருமலைக்குச் சென்றுள்ளன.

ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களின் மொத்தம் 44 லொறிகள் திருமலைக்குச் சென்று மா ஏற்றிவர உணவுத் திணைக்களம் உத்தரவுப் பத்திரங்களை (லைசென்ஸுகளை) வழங்கியுள்ளது.

இந்த லொறிகள் மூலம் சுமார் 400 மெற்றிக் தொன் மா எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் கொழும்பில் இருந்து ரயில்மூலம் இன்று 470 மெற்றிக் தொன் மா வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3)

## செஞ்சிலுவை அதிகாரிகள் வரவில்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 23

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்ய இருந்த செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதி நிலைமை காரணமாகவே அவர்கள் தம் பயணத்தை நேற்று ஒத்திவைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

### பெண்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை. தூரத்தே நின்ற நாடோடிப் பெண்மீது பெயர் (ஆச்சிமுத்து) சந்தேகம் ஏற்பட்டது.

சிலர் அவரைப் பிடித்து விசாரித்தனர். தான் தாலிக்கொடியைத் திருடவில்லை என்று அந்தப்பெண் கூறிவிட்டார். பிடித்தவர்கள் விடவில்லை. எங்காவது ஒளித்து வைத்திருக்கிறவா என்று உடம்புச் சோதனை செய்தார்கள். தாலிக்கொடி கிடைக்கவில்லை.

எனினும் அந்தப் பெண் உடம்பை வளைத்து நெளித்த விதம், அவரைப் பிடித்தவர்களின் சந்தேகத்தை வலுப்படுத்தியது. அவரை வைத்தியர் ஒருவரிடம் கூட்டிச் சென்றனர். "எனிமா", கொடுக்கப்பட்டது.

காணமற்போன ஏழுபவுண் தாலிக்கொடி அவரது வயிற்றிலிருந்து கீழே விழுந்தது! அதிசயமில்லை, தாலிக்கொடி அந்த நாடோடிப் பெண்ணிடமிருந்தே மீட்கப்பட்டு ... யவரிடம் ஒப்படைக்கப்பட்டது;

### யாழ். செயலக...

செயற்படும் நிலைக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் சார்பில் மக்களுக்குச் சேவை செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு மாறாக — மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கான வேண்டுகோள்களுக்குச் செவிசாய்த்து, வேலைக்கு — செல்லாதிருக்கும் ஒவ்வொரு ஊழியரையும் மக்கள் விரோத சக்தியாக மாகாண அரசு கணிப்பிட வேண்டிவரும் என்பதை சகல அரசாங்க ஊழியர்களும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அடுத்த வாரம் முதல் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய நிவாரணப் பொருள்களும், பாடசாலைப் பிள்ளைகளுக்கு கொப்பி, புத்தகம், சீருடைக்கான துணிவகைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன; கலவரங்களின்போது இறந்தவர்களுக்கான முழுமையான கொடுப்பனவுகளும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆகவே, எதிர் காலத்தில் எத்தகைய அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் நிகழ்ந்தாலும், யாழ். அரசாங்க செயலகம் தொடர்ந்து ஐந்து நாட்களும் செயற்படும் என்பதைப் ... கொண்டுவர விரும்புகின்றேன் ... (அ-9)

### புதிதாக ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது என்ற அடிப்படையில் கணிக்க வேண்டும் என்றும் பிரதமர் ராஜீவ் காந்தியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய இராணுவம் மாலைதீவுக்கு சென்றது குறிப்பிட்ட ஒரு நிலைமையைச் சமாளிக்கவே. ஆனால் இலங்கையில் அமைதிப்படை இருப்பது ஓர் உடன்பாட்டை அமுல் நடத்துவதற்கான உத்தரவாதியாகவே.

இக் கருத்தை பிரதமர் காந்தியின் கடிதம் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-9)

## மரண அறிவித்தல்கள்

### திரு. அ. பாக்கியநாதர்

பெரியவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புனித "பற்றிக்ஸ்" கல்லூரி முன்னாள் விகிதருமான திரு. அ. பாக்கியநாதர் 21-06-1989 அன்று காலமானார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருள் சகோ. பா. லீனஸ் S. S. J
(மகன்)

பிரதான வீதி,
பெரியவிளான். (973)

### திருமதி செல்லத்துரை விக்கினேஸ்வரி

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை விக்கினேஸ்வரி 21-06-89இல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற இ. செல்லத்துரை (இராசமாணிக்கம்) என்பவரின் அன்பு மனைவியும் ராஜேஸ்வரி, நாகேஸ்வரன், பரமேஸ்வரன், ஸ்கந்தராசா, பேரின்பராசா, ஸ்ரீதரன், செல்வமலர், நவமலர், தவமலர், இந்துமதி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கைதடி வடக்கில் அவரது இல்லத்தில் சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

கைதடி வடக்கு,
கைதடி. (11338)

### செல்வன் நியூமன் சவரிமுத்து

(சென். மேரிஸ் வித்தியாலய பழைய மாணவன்)

செல்வன் நியூமன் சவரிமுத்து அவர்கள் கனடாவில் அகால மரணமானார். இவர் யாழ்ப்பாணம் 12/2, மடம் வீதியில் வசிக்கும் பீ. சவரிமுத்து அக்கினேஸ் தம்பதிகளின் தவப்புத்திரனும், சிமியோன் மரியையின் அன்புப் பேரனும், அமுதா, அருணா, அமலா, குவேனி, கமலினி ஆகியோரின் அருமைச் சகோதரனும், யேசுதாசனின் மைத்துனரும், செல்வன் டுலீப்பின் ஏக மாமனாரும், பூமணியின் அன்பு மருமகனும், அருளானந்தம், யோசேப், பிலேந்திரன், தேவதாசன் (நீர்பாசன இலாகா, திருகோணமலை), அன்ரன் ஆகியோரின் நேசமுள்ள மருமகனும், அருளம்மா, யோசேப்பின், ஆகத்தம்மா, ஜெஸ்பின் ஆகியோரின் பெறுமகனும், துரைசிங்கத்தின் அன்பு மருமகனும், வரப்பிரகாசம், இராசேந்திரம், தேவராசா, செல்வராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பெறுமகனும், ஆகத்தம்மா, தவமணிதேவி, சவினம்மா, ஜெஸ்பி இமல்டா, மேரிலூசியா ஆகியோரின் பாசமுள்ள மருமகனும், தவஞானராஜா, அருள்ஞானதீபன், சுதாகர் (ஜேர்மனி), சசிகலா ஆகியோரின் சகோதரனும், வசந்தாஜெமி, ராஜ்குமார் (இத்தாலி), உதயகுமார், மகிழ்ராஜ் (ஜேர்மனி), உஷா சுபந்தினி ஜெறின்மாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 24-6-89 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி. யோசேப்

12/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (974)


எழுத்துச் சீர்திருத்தம் கருத்தரங்கம்

நாள் : 24 - 06 - 89 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3 மணி
இடம் : மறைக்கல்வி நிலைய மண்டபம்,
358, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கௌரவ செயலாளர்
திருமறைக் கலாமன்றம்

223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (C/2723)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, இல. 292/2 இல உள்ள அச்சகத்தில் 23-06-1989 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org